பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 13 | செவ்வாய்க்கிழமை | 30.12.2025 | அதிர்வு 152

### இவ்வருடம் இதுவரை

## வீதி விபத்துக்களில் 2,692 பேர் மரணம்!



இலங்கையில் 2025 ஜனவரி முதல் இதுவரையில் வீதி விபத்துக்களால் 2 ஆயிரத்து 692 பேர்

06▶



# மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிக்க அநுர அரசு முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்கு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தொலைநோக்குப் பார்வை இல்லை. மாறாக இந்த அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு முயற்சித்து வருகின்றது. ஜனநாயகத்துக்கான வெளிப்படைதன்மையை இல்லாமலாக்குவது அரசின் பணியல்ல.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

06▶

# நிபந்தனைகள் மீறப்பட்டால் அலைவரிசை உரிமம் இரத்து!

## தொலைக்காட்சிகளுக்கு ஊடகத்துறை அமைச்சர் சிவப்பு எச்சரிக்கை



தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான ஒளிபரப்பு அனுமதிப்பத்திரங்கள் ஊடக அமைச்சால் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டே வழங்கப்பட்டுள்ளன என்றும், அந்த நிபந்தனைகள் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மீறப்பட்டால், சம்பந்தப்பட்ட அலைவரிசைகளின் அனுமதிப்பத்திரத்தைத் திரும்பப் பெறும் அதிகாரம் ஊடக அமைச்சருக்கு இருக்கின்றது என்றும் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்களின் சுகாதார அறிவை மேம்படுத்துவதற்காகவும் சுகாதாரத் தகவல்களைப் பரப்புவதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட

06▶




நாடு புயல், வெள்ளம், மண் சரிவு போன்ற பேரிடர் நெருக்கடியில் இருந்து சற்று மீண்டு வருகின்றது.

மீளெழுச்சிப் பணிகள் பரவலாக நடைபெற்று வரும் பின்புலத்தில் பல பொதுச் சேவைகள் வழமைக்குத் திரும்பி வருகின்றன.

இந்தப் பேரிடரில் பாதிக்கப்பட்ட சேவைகளில் ரயில் சேவையும் ஒன்று. பல இடங்களில் ரயில் தண்டவாளப் பாதைகளை வெள்ளம் அள்ளிச் சென்றமையால் ரயில் சேவைகள் பெரும்பாலும் முற்றாக முடங்கின. ஆயினும் பாதைகளைத் திருத்தி அமைக்கும் நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டன. அதனால் ரயில் பாதைகள் பெரும்பாலும் முழுமையாக சேவைக்குத் தயாராகி விட்டன.

ஆனால் ரயில் சேவைகளை வழமை நிலைமைக்குத் திருப்பிக் கொண்டு வருவது ரயில்வேத் திணைக்களமும், போக்குவரத்து அமைச்சும் கரிசனையே காட்டவில்லை என்று குற்றச்சாட்டு எழுகின்றது.

06▶

# இலங்கை விமானப்படைக்கு புதிய பேச்சாளர் நியமனம்

இலங்கை விமானப்படையின் புதிய ஊடகப் பேச்சாளராக குரூப் கெப்டன் நலின் வேவகும்புர நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், அவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 0112322130, 0772229270 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்துவதனூடாக அவரைத் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலக முகவரி:- ஊடகப் பணிப்பாளர், ஊடகப்பிரிவு, இலங்கைவிமானப் படைத் தலைமையகம், பாதுகாப்புத் தலைமையக வளாகம், ஸ்ரீஜயவர்தன புர கோட்டே.



# கை, கால்கள் கட்டப்பட்டு வயோதிபத் தாய் கொலை!

## கண்டியில் கொடூரம்




இந்தச் சம்பவம் கண்டியில் பல்லேகெலே, குண்டசாலை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

87 வயதுடைய வயோதிபத் தாயே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வயோதிபத் தாயின் இரண்டு பிள்ளைகள் வெளிநாட்டிலும், ஒரு பிள்ளை வீட்டில் இருந்து சற்றுத் தொலைவிலும் வசித்து வருகின்றனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவ தினத்தன்று வயோதிபத் தாயின் மருமகள் வீட்டுக்குச் சென்று பார்க்கும் போது, வயோதிபத் தாய் அந்த கை,கால்கள் கட்டப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருப்பதைக் கண்டு உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் சிலர் வயோதிபத் தாயைக் கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## டித்வா சூறாவளியால்

# சுகாதாரக் கட்டமைப்புக்கு 21 பில்லியன் ரூபா இழப்பு!



டித்வா சூறாவளியால் இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்புக்கு 21 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார சேவையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக 62 பல் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"டித்வா புயலால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு 4.1 பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டின் சுகாதார அமைப்பும் 21 பில்லியன் ரூபா இழப்பைச் சந்தித்துள்ளது. வைத்தியசாலைகள் உட்பட 8 சுகாதார நிறுவனங்களை மாற்ற வேண்டியுள்ளது.

சிலாபம் மாவட்ட வைத்தியசாலை மற்றும் மஹியங்கனை ஆதார வைத்தியசாலை போன்ற வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு கணிசமான அளவு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும்." – என்றார்.



# குஷ் போதைப்பொருளுடன் 04 சந்தேக நபர்கள் கைது

குஷ் போதைப்பொருள் தொகையுடன் 04 சந்தேகநபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகளால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் கொண்டுவந்த பயணப்பைகளிலிருந்து 20 கிலோ 684 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.




# வடக்கு சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் புதிய தலைவராக விவேகானந்தன் நியமனம்

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால், வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்திப் பணியகத்தின் தலைவராக, சுற்றுலா அபிவிருத்தி ஆலோசகராகப் பணியாற்றும் கலாநிதி ஜெகநாதன் விவேகானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் செயலகத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை காலை ஆளுநர் கையளித்தார்.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டார்.





# உடப்பில் நேற்று வேட்டைத் திருவிழா

(உடப்பு நிருபர்: க.மகாதேவன்)

வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த பிரமோற்சவ விழாவில் நேற்று திங்கள் மாலை வேட்டைத் திருவிழா(வாழை வெட்டு விழா) நடைபெற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பஞ்சாடசரக் குருக்கள் இந்த விழாவில் கலந்து கொண்டு கிரியைகளை ஆரம்பித்து வைத்தார். பக்தர்கள் பலர் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப்பெற்றுக் கொண்டனர்.











# கிரேட் வெஸ்டர்ன் தோட்டத்தில் நிலச்சரிவு அபாயம்: மனித உரிமைகள் ஆணையத்திடம் மக்கள் முறையீடு

(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)

தலவாக்கலையில் உள்ள கிரேட் வெஸ்டர்ன் தோட்டத்தில் கடந்த மாதம் ஏற்பட்ட நிலச்சரிவு அபாயத்தால் இடம்பெயர்ந்து தற்போது தமிழ் கல்லூரியில் தங்கியுள்ள மக்கள், தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தில் முறைப்பாடு அளித்துள்ளனர்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி பாடசாலைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால், தற்போது பாடசாலையில் தங்கியுள்ள மக்கள் மீண்டும் ஆபத்தான இடத்தில் குடியிருக்கத் தள்ளப் பட்டுள்ளனர் எனக் குற்றம் சாட்டுகின்றனர்.



தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு சரியான ஆய்வு இல்லாமல் அந்த வீடுகள் வசிப்பதற்கு ஏற்றவையாக உள்ளன என்று பரிந்துரைத்துள்ளது என்றும், ஆனால் அந்த இடங்கள் இன்னும் நிலச்சரிவு அபாயத்தில் உள்ளன என்றும் குடியிருப்பாளர்கள் கூறுகின்றனர்.

மக்களின் வேண்டுகோள்:

தங்களுக்கு குடியேற நிரந்தர நிலம் வழங்கப்பட்டால், தற்காலிக அல்லது சிறிய வீட்டைக் கட்டி தங்கள் உயிரைப் பாதுகாக்க மக்கள் தயாராக உள்ளனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# அனைத்துப் பல்கலை கல்விசார் ஊழியர்களும் இன்று ஒரு நாள் அடையாள தொழிற்சங்கப் போராட்டத்தில்!

(நூருல் ஹுதா உமர்)

அரசாங்கத்தினால் அண்மையில் முன்வைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக சட்டத் திருத்தத்தில் காணப்படும் முரண்பாடுகள் மற்றும் இது தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் அனுப்பிய இரண்டு கடிதங்களை உடனடியாகத் திரும்பப்பெறக் கோரி, அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் இன்று 30ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) ஒருநாள் அடையாள தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளன.

இத்தீர்மானம் நேற்று முன்தினம் 28ஆம் திகதி நடைபெற்ற அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் அனுப்பிய இரண்டு கடிதங்களே இந்தப் போராட்டத்திற்கான முக்கிய காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

அண்மையில் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட பல்கலைக்கழக சட்டத் திருத்தம் தேவையானதுதான் என்றாலும், அதில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றை திருத்துவதற்காக பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் முன்வைத்த பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக, கல்வி அமைச்சரான பிரதமர் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இணங்கியிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



FUTA
FEDERATION OF UNIVERSITY TEACHERS ASSOCIATIONS

Federation of University Teachers' Associations

இந்நிலையில், புதிய சட்டம் அமுலுக்கு வரும்வரை தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்படியே பீடாதிபதிகள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனால், இதற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவர் அனைத்துப் பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் அனுப்பிய கடிதத்தில், பீடாதிபதிகளையும் திணைக்களத் தலைவர்களையும் நியமிக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளார்.

இது சட்டரீதியாக முற்றிலும் தவறானது என ஆசிரியர் சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன. மேலும், ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட பல கோரிக்கைகளை அமுல்படுத்துவதில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தொடர்ந்து அசமந்தப் போக்கை பேணிவருவதாகவும், அதனை உடனடியாக தீர்த்து வைக்க வேண்டுமெனவும் கோரி இந்த ஒருநாள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்படுவதாகத் தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் மற்றும் அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனத்தின் உப தலைவர் எம். ஏ. எம். சமீம் தெரிவித்துள்ளார்.

மேலும், குறிப்பாக பீடாதிபதி மற்றும் திணைக்களத் தலைவர் நியமனம் தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதங்களை உடனடியாக திரும்பப் பெறாவிடில், தொடர்ச்சியான தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதுவும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய தமிழர் பிரதேசங்களுக்கான சேவைகளை மீள ஆரம்பிப்பதில் ரயில்வே திணைக்களம் மிகவும் மெத்தனமாக இருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கான ரயில் சேவைகள் பகலில் மட்டும் இடம் பெறுகின்றது. இரவு நேரத்தில் நடந்த ரயில் சேவைகள் பேரிடரின் பின்னர் மீள ஆரம்பிக்கப்படவேயில்லை. வேண்டுமென்றே காலம் இழுத்தடிக்கப்படுகின்றது.

ரயில்களை பகல் நேரத்தில் இந்த மார்க்கங்கள் ஊடாக சேவையில் ஈடுபடலாம் என்றால் இரவிலும் அவற்றை சேவையில் ஈடுபடுத்துவதற்கு என்ன பிரச்சனை, மீண்டும் இரவு ரயில் சேவைகளை ஆரம்பிப்பதில் என்ன சிக்கல் என்பது விளங்கவில்லை.

பாதைகள் புனரமைக்கப்பட்டு விட்ட காரணத்தினால்தான் பகல் சேவைகள் நடைபெறுகின்றன.

ஆனால் இந்த மார்க்கங்களில் இரவு தபால் ரயில் சேவைகளே மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ரயில்வே திணைக்களத்திற்கு அதிக வருவாயை ஈட்டி தருவது இந்த இரவு ரயில் சேவைகள்தான்.

இந்த இரவு ரயில் சேவையை மீள ஆரம்பிக்காமல் இருப்பதற்கு காரணமாக சில விபரீதமான விளக்கங்கள் சில தரப்புகளினால் தரப்படுகின்றன.

இந்த மார்க்கங்களில் அடிக்கடி யானைகளோடு ரயில் மோதுவதால் இரவு நேர சேவைகளை தவிர்க்க முடிவு செய்யப்பட்டு இருப்பதாக ஒரு விளக்கம் கூறப்பட்டது.

இன்னொரு தரப்பு, இந்த மார்க்கங்களில் ஏற்கனவே ரயில் சேவை நடைபெறாத காரணத்தினால் தனியார் பஸ் சேவைகள் கொடி கட்டி பறக்கின்றன என்றும், அவற்றிடம் கையூட்டு வேண்டிய போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் இரவு ரயில் சேவைகளை நடத்தாமல் அவர்களுக்குச் சாதகமாக இவ்வாறு நடக்கின்றனர் என்று காதும் காதும் வைத்தாற்போல் தகவல் தருகின்றது.

மற்றொரு தரப்பினர் இந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் பிமல் ரத்நாயக்க வடக்கு – கிழக்கு தமிழர் பகுதிகளின் அபிவிருத்தி மற்றும் நலனில் ஈடுபாடு காட்டாத அல்லது விரும்பாத பேரினப் போக்குடையவர் என்றும், அதன் காரணமாகவே அவர் தமிழ்ப் பிரதேசங்களுக்கான இரவு சேவைகளை மீள ஆரம்பிக்கும் விடயத்தில் சிரத்தை காட்டாமல் இழுத்தடிக்கின்றார் என்றும் குறிப்பிடுகின்றனர்.

எது, எப்படி என்றாலும் இரவு ரயில் சேவைகள் – குறிப்பாக தபால் ரயில் சேவைகள் – தமிழர் பகுதிகளுக்கானவை மட்டும் நடத்தப்படாமல் தடைப்பட்டு இருப்பதில் அந்த அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சரின் நிலைப்பாடும் காரணமாக இருக்கும் என்பதை மறுக்க முடியாமல் இருக்கின்றது என்பதுதான் உண்மை.

## வீதி விபத்துக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் டபிள்யு. ஜி.ஜே. சேனாதீர கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இந்தத் தகவலை வெளியிட்டார்.

2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 317 ஆல் அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

"2025 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 545 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் விபத்துக்களின் எண்ணிக்கை 272 ஆக அதிகரித்துள்ளது." – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறையில் டக்ளஸின் உயிருக்கு ஆபத்து! பாதுகாப்பை உடனே உறுதி செய்யுங்கள்!!

## அரசுக்குச் சுரேன் ராகவன் அழுத்தம்

"முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதிரிகளாலும், எதிர்க்கட்சிகளாலும் உயிராபத்துக்களை எதிர்கொண்ட ஒருவராவார். அவருக்கான பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான சுரேன் ராகவன் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டாட்சிகளில் முக்கிய பங்கு வகித்தவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்போது மகர சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.



ஆனால் அங்கு ஆயிரம் கைதிகள் மட்டுமே அனுமதிக்கப்பட வேண்டிய போதும் மூவாயிரத்துக்கும் அதிகமான கைதிகள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

டக்ளஸ் தேவானந்தா முன்னர் பல தடவைகள் எதிரிகளாலும், எதிர்க்கட்சிகளாலும் உயிராபத்துக்களை எதிர்கொண்ட ஒருவராவார். ஆகவே, அவருக்கான பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டும் என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்."

– என்றார்.

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், பொலனறுவை மாவட்டம், அரலகங்வில பிரதேச வைத்தியசாலைக்கு 28 இலட்சம் ரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

"இந்த அரசுக்கு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தொலைநோக்குப் பார்வையும், திட்ட வரைபடமும் காணப்படுவதாகத் தெரியவில்லை. இதைவிடுத்து அரசு மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாதொழிப்பதற்கு முயற்சித்து வருகின்றது. ஜனநாயகத்துக்கான வெளியை சுருக்குவது அரசின் பணியல்ல.

பாதிக்கப்பட்ட தாய்நாட்டுக்கு நிவாரணங்களைப் பெற்றுத் தரும், மக்களின் வாழ்க்கையை வலுப்படுத்தக்கூடிய புதிய பயணத்தை ஆரம்பிப்பது தேவையாகக் காணப்பட்டாலும், அரசின் இதுவரையான நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அதனைக் காண முடியாதுள்ளது.

டித்வா சூறாவளிக்கு முன்னர் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு பங்களித்த விவசாயம், சேவைகள் துறை மற்றும் தொழில் துறைகள் சூறாவளிக்குப் பிறகு பல்வேறு கடுமையான அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளன.

இந்தத் துறைகளில் பாதிக்கப்பட்டிருக்கும் தரப்பினருக்கு சேவைகளைப் பலப்படுத்தி, அவர்களைப் வலுப்படுத்துவது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

இந்தத் துறைகளில் உள்ளவர்களுக்கும், சுயதொழில் செய்பவர்களுக்கும் நிவாரணம் வழங்க அரசால் முடியாவிட்டால், அது முழுப் பொருளாதார செயல்முறையையும் பாதிக்கும். அதன் பாதகமான விளைவுகளை நாடு சந்திக்க நேரிடும்.

உணவுப் பாதுகாப்புக்கு, பொருளாதார வளர்ச்சிக்கு, ஏற்றுமதித் துறைக்கு, உற்பத்தித்துறைக்கு, சுற்றுலா உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பக்க பலத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். நிவாரணங்களையும் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

இல்லையெனில், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தத் தரப்பினர் பெற்றுத் தரும் பங்களிப்பு குறைந்து விடும். அரச அதிகாரிகளுக்கு அடிபணியாமல் தகுதியானவர்களுக்கு நிவாரணம் வழங்குவதே அரசின் பொறுப்பாகும். இது தேசிய நிகழ்ச்சி நிரலின் முதன்மை அம்ச மாக அமைந்து காணப்பட வேண்டும்.

வீடுகள், சொத்துக்கள் மற்றும் வணிகங்கள் சேதமடைந்தவர்களுக்கு வாக்குறுதியளித்த நிவாரணத்தை வழங்குவதைத் தவிர்ப்பதற்கான காரணங்களை அரசு தற்போது தேடி வருகின்றது. மக்களை ஏமாற்றாது, வாக்குறுதியளித்த நிவாரணங்களை அதே முறையில் வழங்க வேண்டும்.

இந்த அரசு சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 200 மில்லியன் டொலர் அவசரக் கடனைப் பெற்றிருந்தாலும், இந்தக் கடனுக்கான விதிமுறைகளையும் அரசு கருத்தில் கொள்ள வேண்டும். இந்தக் கடினமான நேரத்திலும் அரசால் சலுகைக் கடனைப் பெற முடியாமல் போயுள்ளது. இந்த வழியில் சென்று ஒரு நாட்டால் முன்னேற முடியாது. தலைதூக்க முடியாது." – என்றார்.

## நிபந்தனைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர்களின் பணியைப் பாராட்டுவதற்காக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "சௌக்கிய அண்டஹெற – 2025" கௌரவிப்பு விழா, அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நேற்று சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்றது. இதன்போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஒவ்வொரு தொலைக்காட்சி அலைவரிசைக்கும் ஒளிபரப்பு அனுமதிப்பத்திரம் தற்காலிக அனுமதிப்பத்திரமாகவே வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.




# தாளையடிக் கடலில் ஞாயிறன்று காணாமற்போன இளைஞரைத் தேடும் நடவடிக்கை தொடர்கின்றது

**(பூ.லின்ரன்)**

தாளையடிக் கடற்கரைக்கு நீராட சென்ற சமயம் காணாமல் போன இளைஞனைத் தேடும் நடவடிக்கை இரண்டாவது நாளாக நேற்றும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரைக்கு நண்பருடன் நேற்று முன்தினம் நீராடச் சென்ற இரண்டு இளைஞர்கள் கடலில் தாத்தளித்தபோது அவகளை கயிறு கொடுத்து காப்பாற்றிவிட்டு கரை திரும்பும் போது காணாமல் போன உடுத்துறையைச் சேர்ந்த பிரபல உதைபந்தாட்ட வீரரான 27 வயதுடைய ஜெசிந்தனை தேடும்பணி நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது கடற்றொழிலாளர் மற்றும் கடற்படை இணைந்து இந்தத் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் இதுவரை அவர் கண்டு பிடிக்க பட வில்லை. தற்போது கடல் கொந்தளிப்பு காரணமாக சுழியோடிகள் மூலம் தேடும் பணி மேற்கொள்ளப்பட முடியாதுள்ளா தாக தேடும்பணியில் ஈடுபடும் கடற்படையினர் தெரிவித்தனர்.




# பறங்கியாறு நீர்த்தேக்கத்திற்கு உட்பட்ட குளங்கள் தொடர்பிலான விசேட கூட்டம்

## வவுனியா ஈச்சங்குளத்தில் நேற்று

வவுனியா மாவட்டத்தின் பறங்கியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து நீர் வெளியேறுவதால் பாதிக்கப்படும் விவசாயிகள் தொடர்பிலான விசேட கூட்டமொன்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று ஈச்சங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

கமக்காரர் அமைப்புக்கள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் பா.பாலேந்திரன், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட பொறியியலாளர், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

ஒவ்வொரு வருடமும் மழை நேரங்களில் பறங்கியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து வெளியேறும் மேலதிக நீர் அதன்கீழ்வரும் குளங்கள் மற்றும் வயல் நிலங்களில் பாரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பில் விவசாயிகள் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினருக்கு முறைப்பாடு தெரிவித்துவந்தனர். இதனையடுத்து இந்தப் பிரச்சினைக்கான தீர்வைக் காணும் வகையில் மேற்படி கலந்துரையாடல் உரிய தரப்பினரின் பங்கேற்புடன் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

வெளியேறும் மேலதிக நீரை வயல்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் உதவியுடன் கால்வாய் ஒன்றை அமைத்து வெளியேற்றுவதற்கான சாத்தியக்கூறினை ஆராயவும், அதற்கான திட்டமொன்றைத் தயாரித்து அதனை செயற்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது. அத்துடன் ஆற்றுநீர் திறந்து விடப்படும் போதும் வெள்ள நீர் வெளியேறும்போதும் விவசாயிகள் போக்குவரத்து செய்யமுடியாத நிலைக்கு தீர்வாக தற்போதுள்ள பாதையில் மேம்பாலம் ஒன்றை எதிர்வரும் வருட நிதியில் அமைக்கவும் தீர்மானிக்கப் பட்டது.

அத்துடன் இந்த நீர்த்தேக்கம் அமைக்கும் போது மக்களிடம் சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு பதிலாக மாற்றுக் காணிகள் வழங்கப்பட்ட போதும் 15 வருடங்கள் கடந்தும் அவற்றிற்கான காணி ஆவணங்கள் இன்னும் வழங்கப்படவில்லை. இந்த விடயத்தையும் உடனடியாகச் செய்துதருவார் என அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்தார்.

அத்துடன் இந்த நீர்த்தேக்கத்திற்கு கீழான சுமார் 5கிலோமீற்றர் நீளமான விவசாய வீதிகளையும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையின் உதவியுடன் உடனடியாக புனரமைத்து தருவதாகவும் அரச அதிபர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இவற்றிற்கு மேலதிகமாக இந்தப் பகுதிகளின் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் பொதுமக்கள் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர், அரசாங்க அதிபர், பிரதேசசபை தவிசாளர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர். அவற்றிற்கான தீர்வுகள் வழங்க நடவடிக்கை எடுக்கவும் முடிவெடுக்கப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## போதையில் சாரத்தியம்

எதிர்காலத்தில், குடிபோதையில் அல்லது கவனக்குறைவாக வாகனம் ஓட்டினால், அத்தகையோருக்கு எதிராகப் போக்குவரத்துச் சட்டத்திற்கு மேலதிகமாக குற்றவியல் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.ஜி.ஜே. சேனாதிர தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை என்று நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் கூறியிருக்கின்றார்.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வீதி விபத்துக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் அவர், இதற்கு முக்கிய காரணம் போதைப் பொருள் மற்றும் மது அருந்துதல் தான் என்றும் சுட்டிக்காட்டுகின்றார்.

எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகளைப் போக்குவரத்து சட்டத்திற்கு கூடுதலாக குற்றவியல் சட்டத்தின்கீழ்கையாளபொலிஸ்மா அதிபர் உத்தரவுகளை பிறப்பித்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் குடிபோதை பாவனை ஒருபுறம் என்றால், மறுபக்கத்தில் போதைப்பொருள்பாவனைபெரிய அளவில் அதிகரித்து வருகின்றது.

சுகாதார - மருத்துவ புள்ளி விவரங்கள் இதனை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இத்தகைய போதைகளினால் மதி இழந்தவர்கள் வாகனம் செலுத்த அனுமதிக்கப்பட்டால் வீதிகளில் பயணிப்போர் பேராபத்துக்கு உள்ளாகும் வாய்ப்பு அதிகரிக்கும்.

ஆகையினால் குடிபோதை மற்றும் போதைப் பொருள் பாவிப்போர் போதையோடு சாரத்தியம் செய்வதை பிறரின் உயிர்களைப் பாதுகாப்பதற்காகக் கட்டுப்படுத்தியேயாக வேண்டும்.

சாதாரண போக்குவரத்துச் சட்டங்களின் கீழ் இவ்வாறு போதையில் சாரத்தியம் செய்வோரைக் கட்டுப்படுத்துவது சாத்தியமற்றது என்பது உண்மைதான். அதனால்தான் இவ்வாறு போதையில் சாரத்தியம் செய்வோரைக் குற்றவியல் சட்டங்களின் கீழ் கையாள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது. இது தவிர்க்க முடியாத ஒரு நடவடிக்கைதான்.

போதையில் சாரத்தியம் செய்வோர் பிடிபட்டால் அதன் பின்னர் அவர்களின் சாரதி அனுமதி பத்திரங்களை ரத்து செய்வது போன்ற இறுக்கமான நடவடிக்கைகளும் கட்டாயம் எடுக்கப்பட்டேயாக வேண்டும்.

அதுவும் போதையின் மயக்கத்தில் வாகனங்களை செலுத்துவோர் தங்களையும், தங்கள் வாகனத்தில் இருப்பவர்களையும் மட்டுமல்லாமல், வீதியில் செல்லும் பாதசாரிகளினதும் ஏனைய வாகனங்களில் பயணம் செய்பவர்களினதும் உயிருடன் விளையாடுகின்றனர் என்பது மிக முக்கிய விடயமாகும்.

நாளாந்த விபத்துக்களை ஆராயும் போது, பாதசாரிகளே அதிகளவில் விபத்துக்களுக்குள்ளாகின்றனர் என்பது தெரிய வந்துள்ளது. வருடாந்த விபத்துக்களில் 31 சதவீதமானவை பாதசாரிகள் தொடர்பானவையாகும்.

பல விபத்துக்களுக்குப் போதைப் பொருள்மற்றும் மதுப்பாவனையே காரணமாகிறது என்பதும் புள்ளி விவரங்களில் உறுதியாகியுள்ளது.

ஆகவே, இனிவரும் காலங்களில் மதுபோதையில் அல்லது போதைப் பொருள் பாவித்துக் கவனக்குறைவாக வாகனம் செலுத்துபவர்களுக்கு எதிராகக் குற்றவியல் சட்டம் பாயும். அது தவிர்க்க முடியாத கட்டாயம்.



# சாயி பாலவிகாஷ் அறநெறி பாடசாலையின் பரிசளிப்பு விழா

சாயி பாலவிகாஷ் அறநெறி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் நடைபெற்றது.

சாயி சமூக சேவை ஒருங்கிணைப்பாளர்களான ரஜீவ் குணசேன மற்றும் திருமதி பிரகாஷினி தர்மசுதன் ஆகியோரின் அனுசரணையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், பாலவிகாஷ் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன. மருத்துவர் அருள் இராமலிங்கம், திருமதி சித்ரா அருள் இராமலிங்கம் தம்பதியர் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர்.












# 21 வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் காடு மண்டிக் கிடந்த வீதியைச் செப்பனிடும் நடவடிக்கை நேற்றுத் தொடங்கியது

## மட்டு. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையினால்

**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட ஒந்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு, பெரியகல்லாறு போன்ற கிராமங்களை கரையோரமாக இணைக்கும் பாதை 21 வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்டிருந்தது. இவ்வீயைச் செப்பனிடும் பணி நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பெரியகல்லாறு மீனவர் சங்கம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் தவிசாளருக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய இவ்வாறு காடு மண்டிக் காணப்பட்ட சுமார் ஒன்றரைக் கிலோமீட்டர் நீளமுடைய இவ்வீதியின் புனரமைப்பு பணிகளை தவிசாளர் மேக சுந்தரம் வினோராஜ் ஆரம்பித்து வைத்தார்.

தாம் பிடிக்கும் மீன்களை ஒன்றரைக் கிலோமீட்டருக்கும் மேல் மீன்களை கூடைகளில் சுமந்து கொண்டுதான் வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றோம். இதுவரைகாலமும் இவ்வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தோம். அது எமக்கு கைகூடவில்லை. இந்நிலையில்தான் நாம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைத் தவிசாளருக்கு இக்கோரிக்கையை முன்வைத்திருந்தோம். அவ்வாறு எமது கோரிக்கை முன்வைக்கப்பட்டு ஒரு வாரத்திற்குள்ளேயே இவ்வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்காக தவிசாளருக்கு தமது நன்றியைத் தெரிவிக்கிறோம் என அப்பகுதி மீனவர் சங்கத்தினர் தெரிவித்தனர்.














# படகு வழங்கலில் முறைகேடு எனத் தெரிவித்து வடமராட்சி கிழக்கில் கவனவீர்ப்புப் போராட்டம்

(பூ.லின்ரன்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கத்திற்கு உட்பட்ட சங்க உறுப்பினர்கள் நேற்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

தாளையடி நன்னீர் திட்ட நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு கடல் தொழிலாளர் சமாசத்திற்குட்பட்ட அனைத்து துணைச் சங்கங்களுக்கும் இரண்டு படகுகள் வெளி இணைப்பு இயந்திரத்துடன் இலவசமாக வழங்கப்பட்டன.

அந்தப் படகுகள் சமாச நிர்வாகத்தினர் முன்பாக கலந்துரையாடலின் மூலம் தெரிவு செய்து வழங்கப்பட்டு வந்தன.

இந்த படகு வழங்கலில் முறைகேடு நடைபெற்று இருப்பதாக அண்மைக் காலமாக வடமராட்சி கிழக்கின் பல சங்கங்களின் பிரதிநிதிகள் தொடர் குற்றச்சாட்டை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டு இருப்பதாக வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்கு மக்கள் பிரதேச செயலகத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கருத்து தெரிவிக்கையில் -

தாளையடி நன்னீர் திட்ட நிறுவனத்தால் நாகர்கோவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட இரு படகுகள் தொடர்பில் முறைகேடு நடந்துள்ளது.

இது தொடர்பாக நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இரு படகுகளையும் நாகர்கோவில் மேற்கு கடற்தொழிலாளர் சங்கம் ஏலத்தில் விற்று விட்டு அதன் பெறுமதியான 18 இலட்சம் ரூபாவை பக்கச்சார்பாக ஒரு சிலருக்கு மட்டும் பகிர்ந்தளித்துள்ளனர்.

இது தொடர்பாக சங்க அங்கத்தவர்கள் எங்களுக்கு அறிவிக்கவில்லை.இது மாபெரும் மோசடி. இதற்கு சமாசமும் துணை போயுள்ளது.

மீள் குடியேறிய காலத்திலிருந்து இதுவரை எமக்கு எந்த வித கொடுப்பனவும் கிடைக்கவில்லை.

மக்கள் எல்லோருக்கும் பொதுவாக வழங்கப்பட்ட படகை விற்பனை செய்து விட்டு அதன் தொகையை ஒரு சிலருக்கு மட்டும் பகிர்ந்து கொடுத்துள்ளமை நாகர்கோவில் கடற்தொழிலாளர் சங்கத்தின் மிக மோசமான செயல். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

இது தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் இங்கு வந்திருக்கிறோம். பிரதேச செயலருக்கும் கடிதம் ஒன்றை கையளிக்கிறோம். உரியவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொண்டு எமக்கு நீதியை பெற்றுத் தர வேண்டும். - என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதன் போது போராட்டக்காரர்களை சந்தித்து, அவர்கள் தரப்பில் வழங்கப்பட்ட கடிதத்திற்கு உரிய முறையில் விசாரணை மேற்கொண்டு விரைவில் தீர்வு வழங்குவார் என வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் உறுதியளித்தார்.






# 6 கைதிகளை சுட்டு கொன்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் சிறைச்சாலை கட்டுப்பாட்டாளர் கைது

2009 ஆம் ஆண்டு களுத்துறை சிறைச்சாலையிலுள்ள 06 கைதிகளை சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் சிறைச்சாலை கட்டுப்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்ட மாஅதிபரின் உத்தரவிற்கமைய குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வஸ்கடுவ பகுதியைச் சேர்ந்த 57 வயதான நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

2009 ஏப்ரல் 15 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுசம்பவத்தில்06கைதிகள்உயிரிழந்ததுடன்,04பேர்படுகாயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.




# இணையவழி நிதி மோசடிகள் அதிகரிப்பு; பொதுமக்களுக்கு பொலிஸ் அறிவுறுத்தல்

இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி பொதுமக்களை ஏமாற்றி நிதி மோசடி செய்யும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன என இலங்கை பொலிஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக டெலிகிராம், வட்ஸ்அப் மற்றும் ஏனைய ஒன்லைன் தகவல் தொடர்பு வலைப்பின்னல்கள் ஊடாக இந்த மோசடிகள் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சந்தை விலையை விட மிகக் குறைந்த விலையில் பொருள்களை வழங்குவதாகக் கூறி விளம்பரப்படுத்துதல்.

பொருள்கள் விற்றுத் தீரப்போகின்றன அல்லது வேறு வாடிக்கையாளர்கள் வரிசையில் உள்ளனர் எனக் கூறி, நுகர்வோரை நிதானமாகச் சிந்திக்க விடாமல் அவசரப்படுத்துதல்.

ஒரு பொருளை உங்களுக்காக ஒதுக்கி வைப்பதாகக் கூறி, 5,000 முதல் 20,000 ரூபா வரை வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யுமாறு வற்புறுத்துதல்.

போலி வேலை வாய்ப்புகள் அல்லது கவர்ச்சிகரமான சலுகைகளை வழங்கி, வங்கி விபரங்கள் மற்றும் பயனாளர் பெயர்களைத் தந்திரமாகப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றை மோசடியாளர்கள் யுக்தியாகக் கையாள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கையில் பொருள் கிடைக்காமல் எக்காரணம் கொண்டும் முன்பணம் செலுத்தக் கூடாது.

விற்பனையாளரிடம் அந்தப் பொருள் உண்மையாகவே உள்ளதா என்பதை உறுதிப்படுத்தக் காணொலி அழைப்பை மேற்கொள்ள வேண்டும்.

இதன்போது விற்பனையாளரின் முகத்தையும் தெளிவாகக் காட்டுமாறு கோர வேண்டும். முன்பின் தெரியாத விற்பனையாளர்களைச் சந்திக்க நேரிட்டால், தனியாகச் செல்வதைத் தவிர்த்து, மக்கள் நடமாட்டம் உள்ள பாதுகாப்பான பொது இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பிற நபர்களின் அடையாள ஆவணங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வங்கிக் கணக்குகளையே மோசடியாளர்கள் பயன்படுத்துவதால், வங்கி விபரங்கள் குறித்து சந்தேகம் இருப்பின் பணத்தை வைப்புச் செய்யக் கூடாது.

பணம் அல்லது தகவல்களைப் பெற்றுக் கொண்டவுடன் மோசடியாளர்கள் உங்களைத் தொடர்புகொள்ள முடியாதபடி முடக்கிவிடுவார்கள் என்பதால், இத்தகைய ஒன்லைன் கொடுக்கல் வாங்கல்களில் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்குமாறு பொலிஸ் கேட்டுக்கொண்டுள்ளது.





# சூறாவளியை விட அதன் பின்னரான பாதிப்புகளால் அதிக உயிரிழப்புகள்

## எதிர்க்கட்சித் சஜித் தலைவர் எச்சரிக்கை

சூறாவளி வீசும் நேரத்தை விட, அது ஓய்ந்த பின்னரான காலப்பகுதியிலேயே அதிகளவான உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என அண்மைக்கால ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வறிக்கையை மேற்கோள் காட்டி இதனைத் தெரிவித்தார்.

மொனாஷ் பல்கலைக்கழகமானது 2000 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒன்பது நாடுகளில் இடம்பெற்ற சுமார் 15 மில்லியன் மரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விரிவான ஆய்வை முன்னெடுத்துள்ளது.

சூறாவளிக் காற்றின் நேரடித் தாக்கத்தினால் பலியாகும் நபர்களின் எண்ணிக்கையை விட, சூறாவளி ஓய்ந்த பின்னரான காலப்பகுதியில் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளன என இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சூறாவளிக்குப் பின்னர் ஏற்படும் தொற்று நோய்கள், போதிய மருத்துவ வசதியின்மை, வாழ்வாதாரப் பாதிப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு சீர்குலைவு போன்ற காரணிகளே இவ்வாறான அதிகப்படியான உயிரிழப்புகளுக்கு வழிவகுப்பதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஆய்வு முடிவுகளை நாம் பாடமாகக்கொள்ள வேண்டும். சூறாவளி வீசும் போது மாத்திரமன்றி, அது ஓய்ந்த பின்னரும் மக்களின் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்துவதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.





# சுமார் 3,000 சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை



நீதிமன்ற உத்தரவின்படி நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் உள்ள 16 வயதுக்குட்பட்ட சுமார் 3,000 சிறுவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

பெற்றோர் அல்லது பாதுகாவலர்களின் அரவணைப்பு இல்லாதமை மற்றும் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்த முடியாதமை போன்ற காரணங்களால் இந்தக் சிறுவர்கள் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

போதைப்பொருள் பழக்கம், திருட்டு, கொலை, திட்டமிட்ட குற்றக்கும்பல்களின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடுத்தப்பட்ட சிறுவர்கள் மற்றும் பாலியல் வன்முறைக்கு ஆளான சிறுவர்கள் நீதிமன்ற நடவடிக்கை மூலம் நன்னடத்தை இல்லங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இல்லங்களில் அநாதரவாக வீதியில் கைவிடப்பட்ட சிறுவர்களும் அடங்குவர்.

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இந்த சிறுவர்களை முறையான பாடசாலைக் கல்வியில் இணைப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, இவர்கள் 18 வயதை பூர்த்தி செய்து சமூகத்துடன் இணையும் போது, முறையான அடையாள ஆவணங்கள் இல்லாததால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் வேலை வாய்ப்புகளைப் பெறுவதும் கேள்விக்குறியாகியுள்ளது.

இந்த இக்கட்டான சூழ்நிலையைத் தவிர்க்க அரசாங்கம் புதிய நடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளதாகஅமைச்சர்சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்தார்.

அதன்படி, பதிவாளர் நாயகம் திணைக்களம் ஊடாக, குழந்தைகளின் தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டு "உத்தேச வயது" நிர்ணயிக்கப்பட்டு, பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

தாய் அல்லது தந்தையின் விபரங்கள் இல்லாத பட்சத்தில், அந்தந்த நன்னடத்தை இல்லங்கள் அமைந்துள்ள மாகாண ஆணையாளரின் பெயரை பாதுகாவலராகப் பயன்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது 46 அரச நன்னடத்தை இல்லங்களிலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 308 இல்லங்களிலும் மொத்தம் 9,191 சிறுவர் மற்றும் இளைஞர்கள் தங்கியுள்ளனர்.

இவர்களில் முதற்கட்டமாக 16 வயதுக்குட்பட்ட 3,000 சிறுவர்களுக்கு விரைவில் பிறப்புச் சான்றிதழ் வழங்கும் வேலைத்திட்டத்தை அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாக அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் மேலும் தெரிவித்துள்ளார்.

# தெற்காசிய நாட்டிலிருந்து வந்த அச்சுறுத்தல் கண்டியில் அதிரடிச் சோதனை நடவடிக்கை




கண்டி மாவட்டச் செயலகத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கு, குண்டு வெடிப்பு நிகழப்போவதாக அச்சுறுத்தல் விடுத்து இரண்டு மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டிருப்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த அச்சுறுத்தல் மின்னஞ்சல்கள் ஒரு தெற்காசிய நாட்டிலிருந்து அனுப்பப்பட்டவை என்பது முதற்கட்ட விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதே நாட்டிலிருந்து கடந்த டிசம்பர் மாதமும் இவ்வாறான மின்னஞ்சல்கள் அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. முதல் மின்னஞ்சல் டிசம்பர் 23 அன்று பெறப்பட்டது.

இருப்பினும், மாவட்டச் செயலாளர் இது குறித்து டிசம்பர் 26 அன்று காலையிலேயே அறிந்துகொண்டார்.

மாவட்ட செயலாளர் இந்திக உடவத்த அளித்த புகாரைத் தொடர்ந்து, வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவு, மோப்ப நாய் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படையினர் செயலக வளாகத்தை முழுமையாகச் சோதனையிட்டனர்.

டிசம்பர் 26 ஆம் திகதி விடுமுறைக்குப் பிந்தைய முதல் வேலை நாள் என்பதால், அதிகப்படியான பொதுமக்கள் சேவைகளைப் பெற வந்திருந்தனர்.

முதல் சோதனையின் முடிவில் அது வெறும் வதந்தி என அறிவிக்கப்பட்டு வேலைகள் மீண்டும் தொடங்கிய நிலையில், மாலை 4 மணிக்குள் குண்டு வெடிக்கும் என இரண்டாவது மின்னஞ்சல் வந்தது.

மீண்டும் பொலிஸார் சோதனையிட்டதால் அச்சமடைந்த பணியாளர்கள் அரை நாள் விடுமுறை எடுத்துச் சென்றனர்.

சாரதி அனுமதிப்பத்திர புதுப்பித்தல் போன்ற பல்வேறு தேவைகளுக்காக நெடுந்தூரத்திலிருந்து வந்திருந்த பொது மக்கள், சேவைகளைப் பெற முடியாமல் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

# மே 30 ஆம் திகதியை வெசாக் தினமாக அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை





2026 ஆம் ஆண்டு மே மாதத்தில் இரண்டு பூரணை தினங்கள் வருவதால், அவற்றில் எதனை வெசாக் தினமாக அறிவிப்பது என்பது குறித்து பௌத்த மதத் தலைவர்கள் ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போதைய அரச நாட்காட்டியில் மே முதலாம் திகதி வெசாக் தினமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அன்றைய தினம் அதற்குரிய நட்சத்திர பொருத்தம் இல்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சாஸ்திர ரீதியான ஆலோசனைகளின்படி, சரியான நட்சத்திரம் கூடிவரும் மே 30 ஆம் திகதியை அதிகாரப்பூர்வ வெசாக் தினமாக மாற்றியமைக்குமாறு மதகுருமார்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பண்டைய சாசன மரபுகளைப் பேணுவதற்காகவும், குழப்பங்களைத் தவிர்ப்பதற்காகவும் இந்தத் திருத்தம் அவசியமென அவர்கள் கருதுகின்றனர்.

எனவே, அன்றைய தினத்தில் சகல அரசு விழாக்களையும் மற்றும் சமய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# டிட்வாவின் பின்னர் மீண்டும் தொடங்கிய யாழ் சர்வதேச மைதான கட்டுமான பணி

## ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மண்டைதீவு பகுதியில் அமையவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமீபத்தில் நிலவிய டிட்வா சூறாவளி காரணமாக கட்டுமானப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன.

இதன் காரணமாக 2026 ஜனவரி 14 ஆம் திகதி நடைபெறவிருந்த முதலாவது பரீட்சார்த்தப் போட்டி உட்பட திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களில் தடங்கல் ஏற்பட்டது.

தற்போது பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்தும் 2026 ஐ.சி.சி. ஆண்களுக்கான இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத் தொடர் நிறைவடைந்த பின்னர் இந்த பரீட்சார்த்தப் போட்டி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் மைதானத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்ய முடியும் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த சர்வதேச கிரிக்கெட் மைதானமானது 48 ஏக்கர் பரப்பளவில், 10 மத்திய ஆடுகளங்களுடன் அமைக்கப்படவுள்ளதுடன், மைதானத்தின் எல்லை தூரம் 80 மீட்டர்கள் வரை விரிவடையும் வகையில் வடிவமைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 138 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட ஒரு விளையாட்டு நகரத்தை உருவாக்கும் ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் விரிவான திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த மைதானம் நிர்மாணிக்கப்படுகிறது.

இலங்கையின் வட மாகாணத்தில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதில் இந்த முயற்சி ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்பதுடன், இது ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் தேசிய பாதை வேலைத்திட்டத்திற்கும் வலு சேர்க்கும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விமர்சிப்பவர்கள் எல்லாம் பயங்கரவாதிகளா?: புதிய சட்டத்துக்கு எதிராக புபுது ஜகொட கேள்வி




தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்துவிட்டு, தற்போது அதைவிடக் கடுமையான பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டம் எனும் புதிய அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டுவரத் தயாராகி வருவதாக முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜகொட குற்றம் சாட்டியுள்ளார்.

நுகேகொடையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு அவர் இதனை குறிப்பிட்டார்.

இந்த புதிய சட்டத்தின் கீழ், அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது கூட பயங்கரவாதச் செயலாக வரையறுக்கப்படலாம் என அவர் எச்சரித்துள்ளார்.

உதாரணமாக, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினாலோ அல்லது வெளிநாட்டு அரசாங்கங்களுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்யக் கோரினாலோ, அவை பயங்கரவாதமாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட வாய்ப்புள்ளது.

இது நாட்டைப் பாதுகாப்பதற்கான சட்டம் அல்ல, அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களை ஒடுக்குவதற்கான முயற்சி என்று அவர் சாடியுள்ளார்.

தடுப்புக்காவல் உத்தரவுகளில் கையெழுத்திடும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய புபுது ஜயகொட, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு அரசியல் நியமனதாரருக்கு நீதிமன்ற அதிகாரங்கள் வழங்கப்படுவது ஆபத்தானது என்றார்.

மேலும், சட்டமா அதிபர் சந்தேக நபர்களுடன் "டீல்" பேசவும், வழக்குகளை 20 ஆண்டுகள் வரை இழுத்தடிக்கவும் இந்தச் சட்டம் வழிவகை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால் அவசரகாலச் சட்டம் இல்லாத நிலையிலும், இராணுவம் வீடுகளுக்குள் புகுந்து சோதனை நடத்தும் அதிகாரம் பெறும் எனவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவர், எவருடைய கைபேசி மற்றும் குறுஞ்செய்திகளையும் நீதிமன்ற அனுமதியின்றி எப்போது வேண்டுமானாலும் பரிசோதிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் போராட்டங்களுக்கு அழைப்பு விடுப்பவர்கள் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தப்படலாம் எனவும் அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் மக்களின் வசதிக்காக அல்ல, மாறாக அவர்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கே பயன்படுத்தப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் தற்காலிகமாக கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் பல தசாப்தங்களாக நீடிப்பதைப் போல, இந்தச் சட்டமும் நிரந்தரமான அடக்குமுறையாக மாறும் என அவர் எச்சரித்துள்ளார்.

எனவே, ஜனநாயகத்திற்கு எதிரான இந்தச் சட்டத்தைக் கொண்டுவர மக்கள் அனுமதிக்கக் கூடாது என்றும், இதை முறியடிக்க அனைவரும் முன்வர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார்.

# வீடு திரும்பிய வேலன் சுவாமியை சந்தித்து நலம் விசாரித்தனர் கத்தோலிக்க குருக்கள்





அண்மையில் தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டத்தில் கலந்து கொண்ட வேலன் சுவாமி அவர்கள் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் பிணையில் வீடு திரும்பிய நிலையில், அவரை கத்தோலிக்க குருக்கள் சென்று நலம் விசாரித்துள்ளனர்.

கத்தோலிக்க குருக்களான அருட்தந்தை வசந்தன், அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா, அருட்தந்தை ஜேக்குமார் அடிகளார் ஆகியோர் நேற்று நல்லூர் சிவ ஆலயத்தில் வேலன் சுவாமிகளை சந்தித்து நலம் விசாரித்தனர்

மதகுருமார்கள் மீது அடக்குமுறையைகட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளமைக்கு கத்தோலிக்க மதகுருக்கள் தமது கடும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளனர்.

# ஆட்சியில் பங்கு என்ற பேச்சுக்கே இடமில்லை: கூட்டணிக் கட்சிகளிடம் தி.மு.க. திட்டவட்டம்



ஆட்சியில் பங்கு கோரிக்கையை ஏற்க முடியாது, கூட்டணிக்குள் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என காங்கிரஸ் உட்பட தோழமை கட்சிகளிடம் தி.மு.க. திட்டவட்டமாக தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடத்தப்பட உள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகளை தி.மு.க. முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது. ஓரணியில் தமிழ்நாடு, உடன் பிறப்பே வா, மண்டல மாநாடுகள் போன்ற தொடர் செயல்பாடுகளை திமுக முன்னெடுத்து வருகிறது.

அதேநேரம், தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ், வி.சி.க. உள்ளிட்ட கட்சிகள் மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் 'ஆட்சியில் பங்கு' என்ற கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன.

த.வெ.க. தலைவர் விஜய், தனது கட்சியின் முதல் மாநாட்டில் பேசியபோது கூட்டணி ஆட்சி என அறிவித்தார். இதன்தொடர்நிகழ்வாக தி.மு.க. கூட்டணியில் இந்த விவகாரம் பேசுபொருளானது. எனினும், இதில் தி.மு.க. தொடர்ந்து மௌனம் காத்துவந்தது.

இந்நிலையில் கூட்டணி ஆட்சி கோரிக்கையை ஏற்கமுடியாது எனதோழமைகட்சிகளிடம் தி.மு.க. தலைமை திட்டவட்டமாகதெரிவித்துவிட்டதாகதகவல்கள்வெளியாகியுள்ளன.

தி.மு.கவைப் பொறுத்தவரை சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கும் வேளையில், இது கூட்டணிக்குள் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும். வாக்காளர்களிடமும் தி.மு.க. தனித்து மெஜாரிட்டி பெறாது என்ற தவறான பிம்பத்தை உருவாக்கிவிடும் என்று அதன் தலைமை கருதுகிறது. இதன் காரணமாக தொகுதிப் பங்கீட்டில் வேண்டுமானால் சில சமரசங்களை செய்கிறோம். ஆனால், அதிகாரப் பங்கீடு கோரிக்கையை கைவிட வேண்டுமென தோழமைக் கட்சிகளிடம் தி.மு.க. தலைமை தெரிவித்துவிட்டதாக தி.மு.க. தலைமை அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சமீபத்தில் நடைபெற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின், காங்கிரஸ் மூத்த தலைவர் ப.சிதம்பரம் ஆகியோர் இடையேயான சந்திப்பிலும் தி.மு.கவின் நிலைப்பாட்டை உறுதியாக ஸ்டாலின் கூறிவிட்டதாக கூறப்படுகிறது. அத்துடன், காங்கிரஸ் உட்கட்சி பிரச்னைகளால் தொகுதி ஒதுக்கீட்டிலும் தி.மு.கவுக்கு உள்ள சிரமங்களை ஸ்டாலின் விளக்கியதாகவும் தெரிகிறது.

அதற்குதேசியதலைமைதி.மு.கவுடன் தொடர்ந்து பயணிக்கவே விரும்புவதாகவும், தி.மு.க. தரப்பில் கூட்டணி பேச்சுவார்த்தைக் குழு அமைக்கப்பட்டால், இத்தகைய தேவையற்ற சலசலப்புகளை தவிர்க்கலாம் என்றும் சிதம்பரம் கூறியதாகவும் பேசப்படுகிறது. தி.மு.கவின் இந்த முடிவால் அதன் கூட்டணியில் பெரிய மாற்றங்கள் ஏற்படாது என்பதே அரசியல் விமர்சகர்கள் கருத்தாக உள்ளது.

# கரூரில் 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் ஆனந்த், ஆதவ் உள்ளிட்டவர்கள் ஆஜர்

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் டில்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் கரூர் ஆட்சியர் தங்கவேல், எஸ்.பி. ஜோஷ் தங்கையா, த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், நிர்வாகிகள் ஆதவ் அர்ஜுனா, சி.டி.ஆர்.நிர்மல் குமார் உள்ளிட்டோர் ஆஜராகினர். அவர்களிடம் 9 மணி நேரம் விசாரணை நடைபெற்றது.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்ரம்பர் 27 ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் கலந்துகொண்ட பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு, 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயம் அடைந்தனர். இதுதொடர்பாக விசாரணை நடத்த, வடக்கு மண்டல ஐ.ஜி.அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை தமிழக அரசு அமைத்தது.

பின்னர், இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்து, கரூரில் ஆய்வு செய்து தகவல்களை திரட்டியது. வேலுசாமிபுரத்தில் கடை வைத்திருப்பவர்கள், நோயாளர் காவுவண்டி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள்,பாதுகாப்புபணியில்இருந்தபொலிஸார், உயிரிழந்தவர்கள் குடும்பத்தினர், காயமடைந்தவர்கள் என 200 இற்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தப்பட்டது. த.வெ.க. நிர்வாகிகளிடமும் நவம்பர் 24, 25 ஆம் திகதிகளில் விசாரணை நடைபெற்றது.

சிபிஐ விசாரணையை மேற்பார்வையிட நியமிக்கப்பட்ட உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜய் ரஸ்தோகி, கூடுதல் டி.ஜி.பிக்கள் சோனல் மிஸ்ரா, சுமித் சரண் ஆகியோர் டிசம்பர் 2, 3 ஆம் திகதிகளில் கரூர் வந்து ஆய்வு செய்தனர். அப்போது, கரூர் மாவட்ட ஆட்சியர் தங்கவேல், ஐ.ஜி. ஜோஷி நிர்மல் குமார், எஸ்.பி. ஜோஷ் தங்கையாவிடமும் விசாரணை நடத்தப்பட்டது. த.வெ.க. மாநில நிர்வாகிகளிடமும் சி.பி.ஐ. விசாரித்தது. இதற்கிடையே, உயிரிழப்பு விவகாரம் தொடர்பாக கரூர் நீதிமன்றத்தில் சி.பி.ஐ. அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்தனர்.



மேலும், அடுத்தகட்ட விசாரணைக்காக டில்லி சி.பி.ஐ. தலைமையகத்தில் நேற்று ஆஜராகுமாறு த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, இணை பொதுச் செயலாளர் சிடிஆர்.நிர்மல் குமார், கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் மற்றும் ஆட்சியர், எஸ்.பி.உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் சம்மன் அனுப்பப்பட்டது.

அதன்படி, டில்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமையகத்தில் அனைவரும் நேற்று ஆஜராகினர். அவர்களிடம் தனித்தனியாகவிசாரணைநடத்தப்பட்டது.அப்போது, விஜய் பிரச்சாரக் கூட்டத்துக்கு செய்திருந்த ஏற்பாடுகள், பாதுகாப்பு வசதிகள், கூட்டத்தை ஒழுங்குபடுத்த செயல்படுத்திய திட்டங்கள் குறித்த ஆவணங்களை சி.பி.ஐ. அதிகாரிகளிடம் வழங்கினர்.

அதை படித்துப் பார்த்த அதிகாரிகள், "எத்தனை பேர் வருவதாக கூறி அனுமதி பெற்றீர்கள், எத்தனை பேர் வந்தனர், நீங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதிக பேரை திரட்டினீர்களா அல்லது அவர்களாகவே வந்தனரா, நெரிசல் ஏற்பட்ட உடனே மீட்பு பணிகளில் கவனம் செலுத்தினீர்களா?" என்பது உட்பட 100-க்கும் மேற்பட்ட கேள்விகளை கேட்டுள்ளனர். சில கேள்விகளுக்கு உடனடியாக பதில் அளித்தவர்கள் ஒருசில கேள்விகளுக்கு சிறிது நேரம் அவகாசம் எடுத்து பதில் அளித்துள்ளனர். அனைத்தையும் எழுத்து மூலமாக பெற்றுக் கொண்ட சி.பி.ஐ. அதிகாரிகள், காணொலியாகவும் பதிவு செய்துள்ளனர்.

ஆட்சியர், எஸ்.பி.யும் ஆஜர்கரூர் ஆட்சியர் தங்கவேல், எஸ்.பி.ஜோஷ் தங்கையா, ஏடிஎஸ்பி பிரேம்ஆனந்தன், டிஎஸ்பி செல்வராஜ், கரூர் நகர காவல் ஆய்வாளர் மணிவண்ணன் உள்ளிட்டோரும் விசாரணைக்கு ஆஜராகி இருந்தனர். அவர்களிடமும் அடுக்கடுக்கான கேள்விகள் கேட்கப்பட்டன.

காலை 10.30 மணிக்கு தொடங்கிய விசாரணை 9 மணி நேரம் நீடித்து, இரவு 7.30 மணி அளவில் முடிந்தது. விசாரணை தொடரும் என்று தெரிவிக்கப்பட்டதால், அனைவரும் இன்றும் ஆஜராக உள்ளனர்.

தேவைப்பட்டால் விஜய் உட்பட மேலும் சிலரிடமும் விசாரிக்க சி.பி.ஐ. அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். விசாரணை முடிந்து இரவு வெளியே வந்த நிர்மல் குமார், செய்தியாளர்களிடம் கூறியபோது,

"சம்மன் பேரில், த.வெ.கவை சேர்ந்த 4 பேரும் ஆஜரானோம். சி.பி.ஐ. கேட்ட கேள்விகளுக்கு விளக்கம் அளித்துள்ளோம்.கரூரில்என்னநடந்ததுஎன்பதுஉலகத்துக்கே தெரியும். சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு தேவையான விளக்கத்தையும், முழு ஒத்துழைப்பையும் கொடுத்துள்ளோம்." என்றார்.





# மெக்சிகோவில் தடம் புரண்ட ரயில் 13 பேர் உயிரிழப்பு, 100 பேர் காயம்

மெக்சிகோவின் தென்கிழக்கு ஒசாகா பிராந்தியத்தில் ரயில் தடம் புரண்ட விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர், 100 பேர் காயமடைந்தனர் என்று மெக்சிகோ கடற்படை தெரிவித்துள்ளது.

மெக்சிகோ வளைகுடாவுக்கும் பசிபிக் பெருங்கடலுக்கும் இடையே பயணித்த ரயிலில் 241 பயணிகளும், 9 பணியாளர்களும் இருந்தனர்.

நிசாண்டா நகரத்துக்கு அருகே ஒரு வளைவில் திரும்பும்போது ரயில் தடம் புரண்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது குறித்து விசாரணை நடைபெற்று வருவதை கடற்படை அதிகாரிகள் உறுதிப்படுத்தினார்.

இந்த விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர், 98 பேர் காயமடைந்தனர், அவர்களில் 36 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காயமடைந்தவர்களில்ஐந்துபேரின்நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக மெக்சிகோ ஜனாதிபதி கிளாடியா ஷெயின் பாம் தெரிவித்தார்.

பசிபிக் கடற்கரையில் உள்ள சலினா குரூஸ் துறைமுகத்தை வளைகுடா கடற்கரையில் உள்ள கோட்சகோல்கோஸ் உடன் இணைக்கும் இந்த இன்டர்ஓசியானிக் ரயிலில் 2 என்ஜின்களும், 4 பயணிகள் பெட்டிகளும் இருந்தன என்று கடற்படை தெரிவித்துள்ளது.















# புடின் இல்லம் மீது ஆளில்லா விமானத் தாக்குதல் ரஷ்யாவின் குற்றச்சாட்டை மறுக்கிறார் ஜெலன்ஸ்கி

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் இல்லங்களில் ஒன்றின் மீது ஆளில்லா விமானத் தாக்குதலை நடத்தியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை, உக்ரையின் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மறுத்துள்ளார்.

முன்னதாக, ரஷ்யாவின் வடமேற்கு நோவ்கோரோட் பகுதியில் உள்ள புடினின் அரசு இல்லத்தின் மீது நீண்ட தூர ஆளில்லா வான்வழி விமானங்களை பயன்படுத்தி, கியேவ் இரவு முழுவதும் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் குற்றம் சுமத்தியிருந்தார்.


எனவே அமைதிப் பேச்சுவார்த்தைகளில் தனது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்வதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

எனினும், இந்த கூற்றை வழக்கமான ரஷ்யப் பொய்கள் என்று ஜெலன்ஸ்கி நிராகரித்தார், இது உக்ரைன் மீதான தாக்குதல்களைத் தொடர கிரெம்ளினுக்கு ஒரு சாக்குப்போக்கை வழங்கும் நோக்கம் கொண்டது என்று அவர் கூறியுள்ளார்.

திங்களன்று டெலிகிராமில் பகிரப்பட்ட ஒரு அறிக்கையில், புடினின் இல்லத்தின் மீது ஏவப்பட்டதாகக் கூறிய 91 ட்ரோன்களும் ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்புகளால் இடைமறித்து அழிக்கப்பட்டதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் லாவ்ரோவ் கூறியுள்ளார்.

அத்துடன், தாக்குதலின் விளைவாக உயிரிழப்புகள் அல்லது சேதங்கள் குறித்த எந்த அறிக்கையும் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.





# இன்றைய ராசி பலன்கள்- 30.12.2025




இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்யம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதற்றம் ஏற்படலாம்.




நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.




இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.




ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சி வசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுபடுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




சில சமயங்களில் அமைதியின்மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமையான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் விறைப்புத் தன்மை உங்களுக்கு கவலையை அளிக்கும்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற்பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 30.12.2025




நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளி தாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள்.உன்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள். பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது என்னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.




சுய முயற்சியில் நல்ல பலன் களைக் காண்பீர்கள். இன்று காணப் படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். யோகா அல்லது தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப் படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள் ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்க ளுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது.

# கிளிநொச்சியில் 131 கிலோ கஞ்சா மீட்பு




**(பூ.லின்ரன்)**

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மருதநகர் பகுதியில் 131 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் பதில் பொறுப்பதிகாரி பி.பி. குலதிலக்க தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இந்த 131 கிலோ கஞ்சாவும் சிக்கியது.

மீட்கப்பட்டுள்ள கஞ்சா கிளிநொச்சி பொலிஸாரால் நீதிமன் றில் ஒப்படைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன எனக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.